DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No. I, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.401/2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | திரு.ராஜா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(எதிரி ஆஜரில்லை: எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 15.10.2024

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை**

சம்பவ நடந்ததாக சொல்லப்படும் பகுதி குடியிருப்பு உள்ள பகுதிதான் என்றால் சரிதான். சம்பவ நடந்தபோது சுமார் 10,20 கூடியிருப்பார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. ஏற்கெனவே எதிரிக்கும், எனக்கும் முன்பகை இருந்ததாக சொல்லியுள்ளது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த புகார் மனுவில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் புதிய தமிழகம் கட்சியில் பொறுப்பில் இருந்ததால் எனக்கு காவல்நிலைய அதிகாரிகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் அவ்வாறு எல்லாம் இல்லை, காவல்நிலையம் சென்றால் பேசி கொள்வேன். நான் சொன்னமாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அந்த நேரத்தில் சிறப்பான வேலைகள் செய்து வந்ததால் நான் அவரது பெயரை கெடுக்க வேண்டும் என்று பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒம்/-P.மகாராஜன்
நீதித்துறை நடுவர் எண்.1
ஸ்ரீவைகுண்டம்.

web copy